# <u>முதன்மை மாவட்ட நீதிமன்றம், பெரம்பலூர்.</u>

# <u>MCOP. No.134/2024</u>

2026-ம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 05ம் நாள் வியாழக்கிழமை மனுதாரர்/எதிர்மனுதாரர் தரப்பு சாட்சியமாகிய **ம.சா.1 வது** நபரின் வாக்குமூலம் (1969-ம் ஆண்டின் 54-வது விதியின் 9-வது பிரிவின் ஏற்பாட்டின்படி) திருமதி. ஆ. பாப்பாத்தி, கிரேடு-1 பெஞ்ச் கிளார்க் என்பவரால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | பிருந்தா | வயது | : | |
| த/பெ (அ) க/பெ | : | | தொழில் | : | |
| ஊர் | : | | வட்டம் | : | |
| மாவட்டம் | : | | | : | |

<u>முதல் விசாரணை:</u>

நான் இந்த வழக்கில் நிருபண வாக்குமூலம் தாக்கல் செய்துள்ளேன். அதிலுள்ள விவரங்கள் எனக்கு தெரியும். நிருபண வாக்குமூலத்தை படித்து பார்த்து தான் கையொப்பம் செய்தேன். முதல்தகவல்அறிக்கைநகல் ம.சா.ஆ.1, விபத்து சம்மந்தமாக பாடாலூர் காவல்நிலையத்தில் தயாரிக்கப்பட்ட வழக்கின் சுருக்க விவரம் நகல் ம.சா.ஆ.2, பிரேதகூராய்வுஅறிக்கை நகல் ம.சா.ஆ.3, இறப்புசான்றுநகல் ம.சா.ஆ.4, வாரிசுசான்றுநகல் ம.சா.ஆ.5, 1ம் எதிர்மனுதாரர் வாகனத்தின் பதிவுசான்று நகல் ம.சா.ஆ.6, 1ம் எதிர்மனுதாரின் காப்பீடு சான்று நகல் ம.சா.ஆ.7, 1ம் எதிர்மனுதாரரின் ஓட்டுநர் உரிமம் நகல் ம.சா.ஆ.8,

<u>2ம் எதிர்மனுதாரர் தரப்பு குறுக்குவிசாரணை</u>:

நான் விபத்தை நேரடியாக பார்க்கவில்லை. புகார் நான் கொடுக்கவில்லை. விபத்து நடந்த நேரம் இரவு என்று நான் தெரிந்துகொண்டேன். என்கணவர் மீது இருசக்கரவாகனம் மோதி விபத்து நடந்ததாக தெரிந்துகொண்டேன். விபத்திற்கு பின்னர் முதலில் என்கணவரை பெரம்பலூரில் அரசு மருத்துவமனையில் சேர்த்தோம். அந்த சிகிச்சை விவரங்களை இந்த வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் அவர்கள் உடனே திருச்சி கொண்டுபோக

சொல்லிவிட்டார்கள். திருச்சியில் அரசு மருத்துவமனையில் என்கணவர் சிகிச்சை பெற்றார். சிகிச்சை செலவுவிவரத்தை காட்டக்கூடிய மருத்துவபில்களை நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். என்கணவர் மாதம் ரூ.20000/- வருமானம் ஈட்டிவந்தார் என்பதை காட்டக்கூடிய ஆவணம் தாக்கல் செய்யவில்லை. என்கணவரின் வயதை காட்டக்கூடிய ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். இருசக்கரவாகனத்தில் விபத்து சமயத்தில் 3 பேர்கள் பயணம் செய்ததாக நான் தெரிந்துகொண்டேன். இருசக்கரவாகனத்தில் விதிகளை மீறி 3பேர்கள் பயணம் செய்ததாலும் வழக்கு குறிப்பிட்ட காலத்திற்குள் தாக்கல் செய்யப்படாததாலும் பாலிசி விதிமீறல் இருப்பதால் 2ம் எதிர்மனுதாரர் நஷ்டஈடுகொடுக்க கடமைப்பட்டவர் அல்ல என்றால் சரியல்ல. நான் 12ம் வகுப்பு வரை படித்துள்ளேன். விவசாய வேலைக்கு செல்வேன். என்குழந்தைகள் என்னுடன் இருக்கிறார்கள். என்மாமியார் என்னுடன் தான் இருக்கிறார். என்மாமனார் வேலைசெய்யமுடியாது, என்மாமியார் கூலிவேலைக்கு செல்கிறார். நானும் மற்றும் என்மாமனார், மாமியாரும் என்கணவரின் வருமானத்தை சார்ந்து இல்லாததால் மனுவை தள்ளுபடி செய்யவேண்டும் என்றால் சரியல்ல. என்கணவர் வாகனம் வருவதை கவனிக்காமல் ரோட்டை கடந்ததால் விபத்து ஏற்பட்டது என்று இறுதிஅறிக்கை தாக்கல் செய்யப்பட்டிருப்பதால் அதை நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. நான் பல்வேறு தலைப்புகளின் கீழ் அதிகமான நஷ்டஈடு கோரியுள்ளேன் என்றும், அது கிடைக்கத்தக்கது அல்ல என்றால் சரியல்ல.

<u>**மறுவிசாரணை:**</u>

இல்லை.

Sd/-V.PADMANABHAN,
Principal District Judge,
Perambalur.